www.newwisdomministries.com

கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்



10.04.2022

ஞானம் 5 – ஒலி 15



# புனிதம் தரும் வாரம்...



அருட்பணி.சைமன் பீட்டர்

# கற்போம் கல்வாரிப் பாடம்

இயேசு கிறிஸ்துவில் பிரியமான ஞான ஒலி வாசக சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் என் வணக்கங்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி கொள்கின்றேன்.

இந்தாண்டின் புனித வாரத்தை வரும் குருத்து ஞாயிறன்று துவங்குகின்றோம். இறைத்திட்டப்படி நம்மை மீட்க இறைமகன் இயேசு கிறிஸ்து இம்மண்ணில் அனுபவித்த உச்சபட்ச துயரத்தின் நோக்கத்தையும், நமது கடமையையும் நமக்கு வலியோடும் கண்ணீரோடும் உணர்த்துகின்ற புனிதமான நாட்கள் இவை.

பயம், தயக்கத்திற்கும் அப்பால்தான் நலமும் வளமும், நடைமுறையில் சாத்தியமாகும் என்ற உண்மையை நமக்கு எடுத்துச் சொல்லும் வாரம் இது. துவக்கத்தில் எதையும் என்னால் சாதிக்க முடியும் என்று மார்தட்டி தனது பாடுகளை மூன்று முறை அறிக்கையிட இயேசுவால் முடிந்தது. ஆனால், கல்வாரிப் பலிக்கான நேரம் நெருங்க நெருங்க இயேசு முற்றிலும் பயத்தாலும், நடுக்கத்தாலும், தயக்கத்தாலும் ஆட்கொள்ளப்பட்டு இரத்த வியர்வை வியர்த்தார். பல் வலியும், வயிற்று வலியும் அவனவனுக்கு வந்தால்தான் தெரியும் என்பதுபோல, தனது பாடுகளைப்பற்றிய மனவலி மரண வலியாய் மாறி, அவரைப் பின்வாங்க வைத்துத் தன் தந்தையிடம், இத்துன்பக் கிண்ணத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கதற வைத்தது.

அச்சமயத்திலும் எப்போதும் நம் மன்றாட்டுக்குச் செவி சாய்க்கின்ற, அதுவும் தன் மகன் இயேசு எதைக் கேட்டாலும் செவிசாய்க்கின்ற பரிசுத்தப் பரலோகத் தந்தை, இயேசு தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று கதறியபோது, பதில் ஏதும் கூறாது இறுகிய மௌனம் காத்ததைத்தான், யோவான் 3/16 வசனத்திற்குப்பின் தந்தையின் அன்பையும், நமக்காக அவர் அனுபவித்த வலியையும் மறைத்துள்ளது. இந்தப் புனித வாரத்தை எவ்வளவு நன்றியோடும், நம்பிக்கையோடும் கொண்டாட வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறுகின்றது.

பொதுவாக, நம் அனைவருக்கும் மிகவும் பிடித்த விழா கிறிஸ்துமஸ்தான். ஆனால் அதைவிட புனித வாரம்தான் ஆகச் சிறந்த ஆன்மீக விழாவாகும். ஏனெனில், மீட்பின் முழுமையை நமக்கு வழங்கிய தினங்கள் அவை. பாடுகளே புனிதத்தைத் தரும் என்ற செய்தியை நமக்குத் தரும் தருணம் அது.

அந்தத் தருணம் சாதாரணமாக வரவில்லை. அது இரத்தம் நிறைந்தப் பாதையின் முடிவிலேதான் வந்தது.

கர்ப்பத்திற்குக் கலங்கும் எந்தப் பெண்ணும் தாயாக முடியாது. அதுபோல இயேசு தான் விட்டுவந்த இறைமகன்தன்மையை இரத்தத்தில் குளித்து, தனது மண்ணக சுயத்தை முற்றிலும் இழந்த பிறகே பெறமுடிந்தது.

பந்திக்கு முந்து, படைக்குப் பிந்து என்ற சொலவடைக்கு மாறாக, கெத்சேமேனித் தோட்டத்தில் பயம் தெளிந்து, மனவீரம் கொண்டு மக்கள் புடைசூழ, ஓசான்னா பாடல் முழங்க கோவேறுக் கழுதைமேல் ஏறி தனது கொலைக் களம் எருசலேமை நோக்கி ஆரவாரத்தோடு இயேசு சென்ற தினத்தைத் தான் குருத்து ஞாயிறன்று நினைவு கூறுகின்றோம்.

கல்வாரி கோக்கி கர்த்தர் கருமமே கண்ணாக சென்றதின் வழியாக, நாலு பேர் நல்ல இருக்கணும்னா எந்த நல்ல காரியத்தையும் சந்தோஷமா செய்ய வேண்டும் என்ற உணர்வை இயேசு நமக்குக் கற்றித் தருகின்றார்.

பிறர்மீது அன்பு கொள்பவர்கள் அன்பு வலிதரும் என்பதை எப்போதும் உணர்ந்திருக்க வேண்டும். அன்புதான் புனிதமாக்கும், நிறைவு தரும். அன்பே நம் வழியாகட்டும்.



# விவிலியம் அறிவோம் – 33

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF


## யாக்கோபு ஒரு ஏமாற்றுக்காரர்

யாக்கோபு என்ற பெயருக்கு ஏமாற்றுக்காரன் என்று பொருள் என நாம் ஏற்கனவே பார்த்தோம். யாக்கோபு ஏசாவை இரண்டு தடவைகள் ஏமாற்றியிருக்கிறார். ஏசாவுக்கும் யாக்கோபுக்கும் இடையில் இருந்த பதற்றம் பல நிலைகளில் வெளிப்படுகிறது. ஏசா வேட்டையாடுபவன்,திறந்த வெளிகளில் வாழ்;பவன்; எனவே இயல்பாகவே கடினமானவனாக இருந்தான். யாக்கோபு ஆடுமாடு மேய்ப்பவன்; கூடாரங்களில் வாழ்பவன். எனவே பண்பாடுகள் உள்ளவனாக இருந்தான். அவர்களுக்கிடையில் இருந்த பதற்றம் அதிகமாவதற்கு இன்னும் ஒரு காரணம் இருந்தது. ஈசாக்கு ஏசாவை அன்பு செய்தார்; ரெபேக்கா யாக்கோபு மீது அன்பு கொண்டிருந்தார்.பெற்றோர் இருவரின் அன்பும் பிள்ளைகள் இருவருக்கும் சமமாகக் கிடைக்கவில்லை. அதுவும் ஏசா யாக்கோபு நடுவில் பதற்றம் அதிகமாவதற்குக் காரணமாயிருந்தது என்பதில் ஐயமில்லை. யாக்கோபு ஏசாவை முதல்முதலாக ஏமாற்றும் நிகழ்வைப் பார்க்கும்போது, ஏசா உடனடி திருப்திக்காக ஏங்கினான் என்பது தெரிகிறது. அதற்காக எதையும் செய்யத் தயாராக இருக்கின்றான். கொஞ்சம் செந்திற கூழுக்காக தனது தலைமகனுரிமையே விற்கின்றான் (வ. 30). இஸ்ரயேலில் தலைமகனுக்குரிய உரிமை என்பது குடும்பச் சொத்துக்களில் இரண்டு பங்கைக் குறிக்கும். ஏசா தலைமகனுக்குரிய உரிமையை விற்பதில் எந்தக் கவலையும் கொள்ளவில்லை. தலைமகனுரிமையால் எனக்குஎன்ன பயன்? (வ 32) எனக் கேட்கின்றான். யாக்கோபு தனது சகோதரனான ஏசாவை ஏமாற்றுவதைப் பற்றி ஆசிரியர் எதுவும் கூறவில்லை. தனது சகோதரனின் நிலையை தனக்குச் சாதகமாக யாக்கோபு பயன்படுத்திக் கொள்கின்றான். ஏசாவை ஆணையிட்டுக் கூறவைப்பதன் வழியாக அவன் தலைமகனுக்குரிய உரிமையைத் திரும்பப் பெறமுடியாதபடி செய்துவிடுகின்றான்.

யாக்கோபுஏசாவை இரண்டாவது தடவையாக ஏமாற்றுவதற்கு அவனின் தாய் ரெபேக்கா உதவி செய்கின்றார். இந்தக் கதை ஈசாக்கின் அன்புக்குரிய மகனான ஏசாவுடன் தொடங்குகிறது. அதன்பின் ரெபேக்காவிற்கும் அவருடைய அன்புக்குரியவனான யாக்கோபிற்கும் மாறுகிறது. தொடக்கக் காட்சியில் வயதாகி, பார்வையிழந்த கண்களைக் கொண்ட ஈசாக்கை நாம் சந்திக்கிறோம். தனது இறுதிக்காலம் நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்த ஈசாக்கு தான் இறப்பதற்கு முன் தனது தலைமகனான ஏசாவுக்கு ஆசிவழங்க விரும்புகின்றார். பண்டையகாலத்தில் இறக்கும் தருவாயில் இருக்கும் தந்தையின் ஆசிமிகவும் பயனுள்ளதாகக் கருதப்பட்டது. ஆசிவழங்குவதற்கு முன் அவர் உண்ணும் உணவு புனிதகுணம் கொண்டதாக எண்ணப்பட்டது. ஈசாக்கு தனது தலைமகனான ஏசாவிடம், காட்டுக்குப் போ. வேட்டையாடி, எனக்கு வேட்டைக்கறி கொண்டுவா. நான் விரும்பும் முறையில் சுவையான உணவு வகைகளைச் சமைத்து என்னிடம் கொண்டுவா. நான் அவற்றை உண்பேன். நான் சாகுமுன், உனக்கு மனமார ஆசி வழங்குவேன் எனகின்றார். ஈசாக்கு ஏசாவிடம் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்த ரெபேக்கா யாக்கோபுடன் இணைந்து ஏசாவுக்கு எதிராகத் திட்டமிடுகின்றாள். ஏசா பெறவேண்டிய ஆசியை யாக்கோபு பெறுவதற்கு உதவிசெய்கின்றாள்.

யாக்கோபு முதலில் பயப்படுகின்றான். தனது தந்தை தன்னைஅடையாளம் கண்டுகொண்டால் என்ன நடக்கும் என்பதை நினைப்பதற்கு அவனுக்கு அச்சமாக இருக்கிறது. அப்படிக் கண்டுபிடித்தால் தந்தையின் சாபத்தைப் பெறவேண்டிவரும் என நினைக்கின்றான். ஆனால் ரெபேக்கா, மகனே! உனக்குரிய சாபம் என்மேல் விழட்டும்; நான் சொல்வதை மட்டும் செய் எனக்கூறி அவனைத் தயாரிக்கின்றாள். அதன்பின் யாக்கோபு எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. தனதுதாயின் திட்டப்படி செயல்படுகின்றான். யாக்கோபு ஈசாக்கிடம் வந்தபோது ஈசாக்கு கேட்கின்ற சில கேள்விகள் அவருக்கிருந்த சந்தேகத்தை வெளிப்படுத்துவதாக உள்ளன. நீ எந்த மகன்? மகனே! இது உனக்கு இவ்வளவு விரைவில் எப்படி அகப்பட்டது? மகனே,அருகில் வா, நீ உண்மையிலேயே என் மகன் ஏசாதானா என்று நான் உன்னைத் தடவிப்பார்த்துத் தெரிந்துகொள்வேன் நீ உண்மையிலேயே என் மகன் ஏசாதானா? என பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றார். பார்வை தெரியாமல் இருந்த ஈசாக்கிடம் ஏசா பேசுவது போல் பேசி யாக்கோபு அவரை எளிதில் ஏமாற்றி விடுகின்றார். இறுதியாக யாக்கோபுதன் தந்தையை முத்தமிட, அவனிமிருந்து எழுந்த நறுமணத்தை முன்னிட்டுயாக்கோபின் பொய்யை நம்பி அவனை ஆசிர்வதிக்கின்றார்.

யாக்கோபு ஈசாக்கை ஏமாற்றிப் பெற்ற தலைமகனுக்குரிய ஆசியில் விளை நிலத்திற்கான ஆசியைப் பெறுகின்றார் (தொநூ 27:27ஆ-28). ஆண்டவர் அவனுடைய விளை நிலைத்தை ஆசீர்வதித்து அதை நறுமண வாசனையால் நிரப்பி, வானின் பனித்துளியும், மண்ணின் செழுமையும், மிகுந்த தானியமும், திராட்சை இரசமும் கொடுப்பார் என்றும் நாடுகள் உனக்குப் பணிபுரிந்திடுக! மக்கள் உனக்குப் பணிந்திடுக! உன்றன் சோதரர்க்குத் தலைவன் நீ ஆகிவிடுவாய்! உன் அன்னையின் மைந்தர் உன்னடி பணிந்திடுவர்! உன்னைச் சபிப்பார் சாபம் பெறுக! உன்னை வாழ்த்துவார் வளமுற வாழ்க! என்றும் ஈசாக்கு யாக்கோபை ஆசிர்வதிக்கின்றார். தந்தையிடம் கபடமாக




ஆசிபெற்ற யாக்கோபு வெளியே வந்ததும் எசா உள்ளே வருகின்றான் (வ. 30). யாக்கோபு ஏசாவை ஏமாற்றியது தெரிந்ததும் ஈசாக்கும் ஏசாவும் அதிர்ச்சிக்குள்ளாகின்றனர். பண்டைய காலத்தில் ஓர் ஆசி அல்லது சாபம் திரும்பப் பெறமுடியாதது என்ற எண்ணம் இருந்தது. கூறப்பட்ட ஆசியும் சாபமும் ஒருவாழ்வைப் பெற்றதாக மாறிவிடுகிறது. அதைத் திரும்பப் பெற முடியாது. யாக்கோபுக்குக் கொடுத்த ஆசி மாற்ற முடியாதது. அதைத் திரும்பப் பெறுவதற்கு ஈசாக்கு எதுவும் செய்ய முடியாது. ஏசா இதனால் கலக்கமடைந்து கதறி அழுகிறான். தந்தையிடம் தனக்கும் ஆசிவழங்கக் கேட்கிறான். அவனுடைய தந்தையோ, உன் தம்பிகபடமாய் வந்து ஆசி பெற்றுவிட்டான். அவன் ஆசி பெற்றவனாகவே இருப்பான் எனக் கூறுகின்றார்.

இரண்டாவதுதடவையாகத் தன்னை ஏமாற்றி தலைமகனுக்குரிய ஆசியை யாக்கோபு பெற்றுவிட்டான் என்பதைக் கேட்ட ஏசா, யாக்கோபு என்னும் பெயர் அவனுக்குப் பொருத்தமே. ஏனெனில், அவன் இருமுறை என்னை ஏமாற்றிவிட்டான். ஏற்கெனவே எனக்குரிய தலைமகனுரிமையைப் பறித்துக் கொண்டான். இப்பொழுது எனக்குரிய ஆசியையும் பிடுங்கிக் கொண்டான் என்கின்றான். யாக்கோபு என்ற பெயருக்கு ஏமாற்றுக்காரன்,அடுத்தவன் இடத்தை அபகரிப்பவன் என்பது பொருள். அவனது பெயருக்கு ஏற்றவாறு அவன் நடந்து கொண்டிருக்கிறான். ஏசாதனக்கும் ஆசி கூறும்படி தந்தையைக் கெஞ்சுகிறான். ஈசாக்கும் அவனுக்கு ஆசி கூற முற்படுகிறார். ஆனால் அவர் கூறுகின்ற வார்த்தைகள் சாபத்தைப் போல் தொனிக்கின்றன. யாக்கோபுக்குக் கூறிய ஆசிக்கு நேர்எதிர்மாறானதாக இந்த ஆசி

இருக்கிறது. உன் குடியிருப்புக்கு நிலத்தின் செழுமையோ மேல்வானின் பனித்துளியோ கிட்டாது. நீ உன் வாளினால் வாழ்க்கை நடத்தி உன் தம்பிக்கு அடிமையாய் இருப்பாய்; நீ கிளர்ந்து எழும்போது உன் கழுத்தில் அவன் சுமத்திய நுகத்தடியை முறித்து விடுவாய் என்கின்றார். ஏசா தனது சகோதரனுக்கு அடிமையாக இருப்பான். ஆனால் இந்த அடிமைத்தனம் நிரந்தரமானதல்ல. ஏசா தன்னை ஏமாற்றிய தனது சகோதரன் யாக்கோபு மீது வன்மம் கொள்கிறான். அவனைக் கொலைசெய்யத் துடிக்கிறான். ஏசாவின் திட்டத்தை ரெபேக்கா அறிந்து, யாக்கோபை ஏசாவிடமிருந்து காக்கவிரும்பி அவனைத் தனது சகோதரனான லாபானிடம் அனுப்பி வைக்கிறாள்.

ஈசாக்கு யாக்கோபிற்கும் ஏசாவுக்கும் கொடுத்த ஆசிகள் அவர்களின் நாடுகளான இஸ்ரயேல் மற்றும் ஏதோம் நாடுகளைப் பிரதிபலிக்கின்றனவாக உள்ளன. இஸ்ரயேல் ஒருநாடாக உருவெடுக்கு முன்னரே ஏதோம் ஒரு நாடாக மாறியது. ஆனால் அரசன் தாவீதின் காலத்தில் ஏதோம் தாவீதால் வெற்றிகொள்ளப்பட்டது. ஏதோமியர் தாவிதிற்குக் கப்பம் கட்டி, இஸ்ரயேலின் கீழ் வாழ்ந்த ஒரு சிற்றரசாக இருந்தார்கள். ஆனால் அடிக்கடி ஏதோமியர்கள் இஸ்ரயேலுக்கெதிராகப் புரட்சி செய்தார்கள்; இறுதியில் விடுதலையும் பெற்றார்கள். இந்தக் கதைகளைஎழுதும் ஆசிரியர் ரெபேக்கா மீதும் யாக்கோபுமீதும் எந்தக் குற்றத்தையும் சுமத்தவில்லை. அவர் யாக்கோபை கண்டனத்திற்கும் உள்ளாக்கவில்லை. ஏனெனில் யாக்கோபு கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டவர்; உடன்படிக்கையின் உரிமையாளர் என்பதை அவர் அறிந்திருந்தார். மேலும் ஆண்டவர் ரெபேக்காவுக்குக் கூறிய இறைவாக்கில், மூத்தவன் இளையவனுக்கு பணிந்திருப்பான் (தொநூ 25:23) என்று கூறியிருந்தார். அந்த இறைவாக்கு நிறைவேறுவதற்காக ரெபேக்கா யாக்கோபிற்குத் துணைபோகிறாள். எனவே அவளையும் கண்டனம் செய்வது கடினம். எனவேதான் ஆசிரியர் யாரையும் கண்டனம் செய்யாமல் தவிர்க்கிறார். நடந்த கதையை அப்படியே விவரிக்கிறார். இந்தக் கதையை வாசிக்கின்றபோது நமது சிந்தனைகள் ஏசாவை இரக்கத்துடன் பார்க்கின்றன. ஏனெனில், யாக்கோபின் செயல்கள் குடும்பத்தில் பிரிவினையை உருவாக்குகிறது. பெற்றோரையும் பிள்ளைகளையும் பிரிக்கிறது.

யாக்கோபு ஏசாவை ஏமாற்றும் இந்நிகழ்வுகளை நாம் எப்படி புரிந்து கொள்வது?




நமதுபார்வையில் அவை அறநெறிவாழ்விற்கு முரண்பாடான செயல்களாகத் தெரிகின்றன. இந்த நிகழ்வுகளை புரிந்து கொள்வதற்கு நாம் இந்த நிகழ்வுகள் காட்டும் அறநெறி கருத்துக்களைப் பார்க்க வேண்டியதில்லை. ஏனெனில் இந்தநிகழ்வுகள் அறநெறி வாழ்வைச் சார்ந்தவையல்ல. அவை மாறுபட் டபிரச்சினைகளக் கையாளுகின்றன. அவைகளை நாம் கீழ்காணும் விதங்களில் புரிந்துகொள்ளலாம்:முதலாவது,இந்தநிகழ்வு கள் அறநெறிசார்ந்தபிரச்சினைகளைக் குறிப்பிடவில்லை என்பதை உணரவேண்டும். விவிலிய ஆசிரியரைப் பொறுத்தவரை சமூகத்தில் நிலவிய தீமைகளுக்கு தீர்வுகாண்பது அவரது நோக்கமல்ல; அவருடைய நோக்கமெல்லாம் இஸ்ரயேல் மக்களினம் எவ்வாறு தோன்றியது என்பதை ஏற்கனவே வழக்கத்திலிருந்த பாரம்பரியக் கதைகளைப் பயன்படுத்தி கூறுவதுதான். எனவே இந்தநிகழ்வுகளில் வருகின்ற அறநெறி கருத்துக்களையோ, அல்லது தீச் செயல்களையோ பாராமல் இந் நிகழ்வுகளுக்குப் பின் இருக்கும் பழங்கால கதைகளைப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, விவிலிய ஆசிரியர் எவ்வாறு இந்தகதைகளைப் பயன்படுத்தி குழப்பநிலையில் உள்ள உலகத்திற்கு ஒரு புதுவடிவம் கொடுக்க முயற்சிக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும்.

இரண்டாவது, புதிய ஏற்பாட்டில் நாம் காணும் அறநெறிகளை பழைய ஏற்பாட்டில் காணப்படும் அறநெறிகளுடன் ஒப்பிட்டு பார்க்கக்கூடாது; ஏனெனில் அறநெறி கருத்துகள் எல்லாக் காலத்திலும் ஒன்றுபோல் இல்லை. அதுமட்டுமல்ல,நாம் இரண்டு வேறுபட்ட காலங்களைப் ஒப்பீடு செய்கிறோம்; என்பதை மனதில் கொள்ள வேண்டும். அறநெறி கருத்துகள் காலம், வரலாறு, கலாச்சாரம் இவைகளை அடிப்படையாகக் கொண்டு வளர்கின்றன. உண்மையில் இன்றுநாம் கடைபிடிக்கும் அறநெறிகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய அறநெறிகளை விட மிகவும் சிறப்பானது என்று கூறமுடியும்.ஆனால் இதை அடிப்படையாக வைத்து நாம் சிறந்தவர்கள் நமக்கு முன் வாழ்ந்தவர்கள் அனைவரும் மோசமானவர்கள் என்று தீர்ப்பிடமுடியாது. அவர்களோடு நம்மை ஒப்பிட்டு நாம் அவர்களை விட அறநெறிகளில் சிறந்தவர்கள் என பெருமைபாராட்ட முடியாது. அவர்கள் வாழ்ந்த காலமும் சூழ்நிலையும் வேறு. நாம் வாழுகின்ற காலமும் சூழ்நிலைகளும் வேறு. அவர்கள் பின்பற்றிய அறநெறிகள் அவர்கள் வாழ்ந்த காலத்திய அறநெறிகளைப் பற்றிய சிந்தனைகளில் உதித்தவை. பழங்கால மக்கள் இணையதளம் வைத்திருக்கவில்லை, மின் அஞ்சல் பயன்படுத்தவில்லை, எனவே அவர்கள் மோசமானவர்கள் என்று குறை கூற முடியாது. இன்னும் ஐநூறு ஆண்டுகளுக்குப் பின் வாழும் மனிதர்கள் நாம் இன்று பின்பற்றும் அறநெறிகளை எப்படி மதிப்பிடுவார்கள் எனக் கூற முடியாது.

இறுதியாக யாக்கோபுடன் தொடர்புடைய நிகழ்வுகள் இந்த உலகை புதுப்படைப்பாக மாற்ற எடுக்கப்பட்ட முயற்சியாக வாசிக்கப்பட வேண்டும். விவிலியத்தின்படி புதுப்படைப்பாக்குதல் என் பதுமனிதர்கள் தங்கள் சுயநலங்களை அகற்றி, இந்த உலகை மனிதர்கள் வாழத் தகுந்த இடமாக, மனிதநேயமும் நீதியுணர்வும் நிறைந்த இடமாக, துன்ப துயரங்கள் குறைந்து, சாவுக்குரிய சூழ்நிலைகள் மறைந்து காணப்படும் நிலையைக் குறிப்பதாகும். எனவே விவிலியத்தில் முக்கியமான கதாபாத்திரங்கள் கூட சுயநலம் மிகுந்தவர்களாவும், சந்தேகத்திற்குரிய அறநெறிகளைக் கொண்டு வாழ்வதாகக் காட்டுவதும் இந்தநிலையிலிருந்து அவர்கள் மீண்டு வர வேண்டும் என்பதற்காகத்தான். மனித பலவீனங்களையும் குறைகளையும் கோடிட்டுக் காட்டும் இப்பகுதிகள் ஒரு விதத்தில் விவிலியம் உண்மையை மறைப்பதற்கோ, தவறாக காட்டுவதற்கோ முயலவில்லை என்பதற்குச் சாட்சியாக உள்ளது. மேலும் இந்தப் பாடங்களில் நாம் பார்க்க வேண்டுவது என்னவென்றால் விவிலியஆசிரியர் இவைகளை ஆதரிக்கவோ, அவைகளை நாம் பின்பற்ற வேண்டும் என்று கூறவோ இல்லை யென்பதாகும்;.

பயணம் தொடரும்,

அருட்பணி. **ஆ. அலெக்ஸ்** CMF





# மறையுரை

அருட்பணி. **சூ.ஸ்டீபன் கஸ்பார்**
பங்குதந்தை
ஆரோக்கிய அன்னை ஆலயம்
குமரன் திருநகர் பங்கு, திண்டுக்கல் மறைமாவட்டம்.

## ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு
10-04-2022

## எசாயா 50 : 4 - 7 / பிலி. 2 : 6 11 / லூக். 22 : 14 - 23 : 56

இறை இயேசுவில் எனக்கு மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே இன்று குருத்தோலைப் பவனியோடு நாம் தவக்காலத்தின் 6-ம் ஞாயிறு வழிபாட்டைத் தொடங்குவதால் இதைக் குருத்தோலை ஞாயிற என்கிறோம். இந்த நாள் புனித வாரத்தின் தொடக்க நாள். மகிழ்ச்சியும் துக்கமும் கலந்த நாள். பாவக் கழுவாயிலிருந்து மக்களை மீட்டு மனித நேயத்தோடு வாழ வழிகாட்டிய துன்பத்திற்காக விழா எடுக்கும் நாளே குருத்தோலை ஞாயிறு ஆகும். இயேசுவைத் தாவீதின் மகனுக்கு ஓசன்னா எனப்பாடி அவருடைய பயணம் எருசலேமில் முடியப்போகிறது. அப்பயணத்தின் இறுதிக்கட்டமே குருத்தோலை ஞாயிறாகும்.

நம் ஆண்டவர் இயேசுவுக்குத் தான் சிலுவையில் கையளிக்கப்படப்போவது (மத். 26:2) இறுதியில் சீடர்கள் சிதறி ஓடப்போவது ( மத் 26 : 13 ) எல்லாமே அறிந்திருந்தும் எருசலேம் நோக்கித் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற இயேசு கோவேறு கழுதை மேல் ஏறி (மத். 21:4-5) எருசலேம் நோக்கிப் பயணம் மேற்கொள்கிறார். துன்புறும் ஊழியனாக நம் பாவங்களுக்காய் பாடுகளை அனுபவிக்க, அவர் கல்வாரி பயணத்தை தொடங்குகிறார். அந்த நாள் தான் இன்றைய குருத்தோலை ஞாயிறு ஆகும்.

அன்பான இறை சமூகமே, இயேசுவின் குருத்துவத்தின் நோக்கமே விண்ணகத் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதாகும் **என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையை செய்து முடிப்பதுமே என் உணவு** என்று யோவான் 4 : 34 லிலும் **என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன்** என்று யோவான் 6 :38லும் அவர் சொன்னதை வாசிக்கிறோம். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் பொழுது துன்பம் வரும். துயரங்கள் நேரிடும். பாடுகளின் பாதையில் பயணித்து பரம தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதை இந்த தொடக்க நிகழ்வின் வழியாகத் தன் சீடர்களுக்கு கற்பிக்கிறார் இயேசு.

இயேசு தன் சீடர்களுக்கு கெத்சமனியை அனுபவித்தால்தான் தாபோர் அனுபவம் கிட்டும் என சுட்டிக்காட்டுகிறார். அவரின் திருமுழுக்கிலே இவரே என் அன்பார்ந்த மகன் இவரில் நான் பூரிப்படைகிறேன் என சொல்லித் தன் மகனை பணி வாழ்விற்கு அறிமுகப்படுத்தினார். தாபோர் மலையில் இவரே என் அன்பார்ந்த மகன். இவருக்கு செவி கொடுங்கள் என்று சொல்லி தன் மகனை பலி வாழ்விற்கு அறிமுகப்படுத்தினார். வாழ்வில் இயேசு தன் இறுதி கட்டத்தை நோக்கி பயணிப்பதே குருத்தோலை ஞாயிறு இன்றைய விழா துன்பம் என்பது பொதுவானது. அந்த துன்பத்தில் அர்த்தம் உண்டு என்பதை அறிக்கையிடும் விழா நாளாகும். இயேசு அரவணைத்து ஏற்றுக்கொண்ட துன்பம் அடுத்தவரின், அயலாரின், அந்நியரின், ஏழையரின், ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காக விலையாக கொடுத்த நிலைப்பாடு இன்றைய துக்கநாள் விழாவாகும்.

இந்த குருத்தோலை விழாவிலே மூன்று வகை மனிதர்களை நம்மால் பார்க்க முடிகிறது.

முதல்வகை : குருத்தோலைகளை உயர்த்திப் பிடித்து ஓசன்னா பாடி எருசலேமிலே வரவேற்ற மக்கள் கூட்டம்.

இரண்டாவது வகை : காசுக்கும் பணத்திற்கும் விலை போய் அவரை சிலுவையில் அறையும் என கொக்கரித்த மக்கள் கூட்டம்.

மூன்றாவது வகை: மூன்று ஆண்டுகளாய் இவரை கைது செய்ய முயற்சி எடுத்து தோற்றுப்போன குருக்கள், பரிசேயர், சதுசேயர், கயபா, ஏரோது இவர்கள் நயவஞ்சகமாக யூதாசை கையில் போட்டு பணத்தாசை காட்டி இயேசுவை காட்டிக் கொடுக்க வைத்து கல்வாரிக்குப் கடத்தி வந்த கூட்டம். இவர்களின் வலையில் சிக்கியவன் பிலாத்துமாகும்.

மூன்றையுமே தாண்டி நாலாவது வகை மனிதர்கள் புகழ்ச்சியை விரும்பாது இகழ்ச்சியை ஏற்று பிறருக்காக புது விடியலுக்காக தங்களை இழக்கின்ற உத்தமர்கள். இந்த நால்வரில் நான் யார்? என சிந்திக்க அழைக்கும் நாளே குருத்தோலை ஞாயிறு ஆகும். இதனையே முதல் வாசகத்தில் எசாயாவும் இரண்டாம் வாசகத்திலும் பவுலும் துன்புறும் ஊழியன் என்கிறார்கள். தந்தையின் விருப்பத்திற்கு கீழ்ப்படிந்தவரே நம் ஆண்டவர் இயேசு ஆவார். அவர் தந்தை கடவுள் என்னை கைவிடமாட்டார். அவர் என்னோடு இருக்கிறார் என அவரையே நம்பி கல்வாரி நோக்கி பயணிக்கிறார். கரையாத உப்பு சுவை தராது. சிலுவை சுமக்காத சீடனால் உயிர்ப்பை சுவைக்க முடியாது. ஏனெனில் வியர்வையின்றி வெற்றி இல்லை. சிலுவை இன்றி உயிர்ப்பு இல்லை. இயேசு பிறக்கும்போதும் இறக்கும்போதும் அவருக்கென்று இடமில்லை. இது தான் இயேசுவின் சீடத்துவ வாழ்வாகும் துன்பம் நம்மை இன்பத்தை இறுதியில் சுவைக்க வைக்கும்.

ஆம், அன்பானவர்களே, முதலில் சொல்லப்பட்ட 3 வகை மனிதர்களை தாண்டி 4ஆவது வகையான சுயநலம் கடந்து, பிறரை முன்னிலைப்படுத்தி, தன்னை இழந்து, துன்பமென்னும் சிலுவையை சுமக்க முன்வரும் மனிதர்களா நாம் இப்படி வாழ அழைப்பு தரும் நாள் குருத்து ஞாயிறு புகழ்ச்சியை விரும்பாமல் நிகழ்ச்சியை ஏற்பவர்கள் சூழ்ச்சி செய்பவர்களா பிறர் வாழ நம்மை இழக்க முன்வருபவர்களா?

உருக விரும்பும் திரியாக கருக விரும்பும் மலராகக் கரைய விரும்பும் உப்பாக வாழ அழைக்கும் ஆண்டவரின் குரலுக்குச் செவிகொடுப்போம். மறு கிறிஸ்துவாய் மாறி சிலுவை சுமந்து பாடுகளின் பாதையில் பயணித்து உயிர்ப்பின் மாட்சியில் பங்கெடுக்க முன்வருவோம். ஆமென்.



# ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு

எசா. 50 : 4–7, பிலி. 2 :6–11,

லூக். 22 : 14 – 23 : 56

**10-04-2022**



**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.

## திருவழிபாட்டு நிகழ்வுகளின் முன்னுரை

கரங்களில் குருத்தோலை ஏந்தி, இயேசுவை நம் அரசராக ஏற்று வழிபட வருகை தந்துள்ள அன்பு இறை குலமே, இறையாசீரை பகிர்ந்தளிக்க வருகை தந்துள்ள குருகுலமே உங்கள் அனை வரையும் புனித வாரத்தின் நுழைவாயிலில் நின்றுகொண்டு வரவேற்று மகிழ்கிறேன்.

இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என அறிக்கையிடவும், நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை பெற்றிடவும், குருத்தோலை பவனியில் கலந்து கொண்டு "உன்னதங்களிலே ஓசான்னா" என்று களிகூர்ந்து ஆர்ப்பரித்து மகிழ நாம் இங்கே கூடியுள்ளோம்.

இஸ்ரயேல் மக்களின் வெற்றி ஆர்ப்பரிப்புகளுக்கு இடையே எருசலேமில் நுழைந்த இயேசு கிறிஸ்து, அதே மக்களின் கூக்குரலால் மரணத்துக்கு தீர்ப்பிடப்பட்ட நிகழ்வுகளை சிந்திக்கவும், பாடுகளுக்குப் பின்னால் புதிய பாதை உண்டு என்பதை விசுவசித்து ஏற்கவும் இந்த குருத்தோலை பவனி நம்மை அழைக்கிறது.

இன்றைய வாசகங்கள் அனைத்தும் மெசியாவின் வருகை குறித்தும், அவருடைய வருகைக்காக ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்தும் பேசுகின்றன.

எளிய கோலத்தில் பவனி வரும் இயேசுவை நம் விசுவாச கண்கொண்டு தெய்வத் திருமகனாகப் பார்த்து பரவசப்பட்டு போற்றி, அவர் அரசர், மீட்பர், துன்புறும் ஊழியர் என்னும் உணர்வோடு அவரை ஏற்று, வாழி என்றும், ஓசன்னா என்றும் பாடியபடி இத்திருப்பவனி வழியாக இயேசுவோடு கல்வாரிக்கு பயணமாவோம்.

இயேசு நற்கருணையை ஏற்படுத்தியது, யூதாசால் காட்டிக்கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டது, அவர் சிலுவையில் உயிர் துறந்து அடக்கம் செய்யப்பட்டது என திருப்பாடுகளின் நீண்ட வரலாற்றை நாம் இன்றையத் திருப்பலியில் தியானிக்க இருக்கின்றோம். இப்புனித வாரம் முழுவதும் இயேசுவின் பாடுகளோடும் மரணத்தோடும் ஒன்றித்து மனமாற்றம் பெற்று அன்பு, தாழ்ச்சி, சகோதரத்துவம் என்னும் பண்புகளைக் கொண்டு இயேசுவின் இறையாட்சியின் பங்காளர்களாக நாம் வாழ இறையருளை வேண்டி இன்றைய திருவழிபாட்டு நிகழ்வுகளில் பங்கேற்போம்.

## முதல் வாசக முன்னுரை

தான் கேட்டதை, கற்றதை, உணர்ந்ததை பிறருக்கு அறிவிப்பவனே உண்மை ஊழியன் என்பதை எடுத்துரைக்கிறார் எசாயா. இறைத் திட்டத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு பணி புரியும்போது வரும் துன்பங்களையும் சவால்களையும் நெருக்கடிகளையும் எத்தகைய மன நிலையோடு எதிர்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கீழ்படிதலும், தாழ்ச்சியும் உள்ளவன் உயர்த்தப்படுவான். தாழ்வே உயர்வுக்கு வழி, தாழ்வின்றி உயர்வில்லை என்பதை எடுத்துரைக்கிறது இன்றைய இரண்டாம் வாசகம். இயேசுவின் வழியே தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர் என்ற நம்பிக்கை கீதத்தை இவ்வாசகத்தின் வழியே தூய பவுலடியார் எழுப்புவதை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1. ஆக்குபவராய், காப்பவராய், அருள் தருபவராய் விளங்கும் தந்தையே இறைவா, தான் கேட்டதை, கற்றதை, உணர்ந்ததை பிறருக்கு அறிவிக்கும் உண்மை ஊழியராய் பணி புரியும் எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர் கள் அனைவரும் இயேசுவிடம் காணப்படும் பண்புகளைக் கொண்டு அர்ப்பணிப்போடு பணியாற்றவும். அவர்கள் தங்கள் பணி வாழ்வில் எதிர்கொள்ளும் துன்ப துயரங்கள் இடையூறுகள் போன்றவைகளை துணிச்சலுடன் சந்தித்து, ஆற்றலுடன் செயல்படவும் அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. விடுதலையின் தெய்வமே இறைவா, புனித வாரத்தில் நுழைகின்ற நாங்கள் உமது திருமகன் இயேசுவின் பாடுகளையும், இறப்பையும் சிந்தித்து, தியானித்து அதன் மூலம் எங்கள் பாவ வழியை விட்டொழித்து, உமது அருளினால் புது வாழ்வை துவங்கி, உமக்கேற்ற மக்களாய் வாழவும், எங்கள் வாழ்க்கையில் வருகின்ற துன்ப துயரங் களை அவரைப்போல் இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டு அவரை பின் செல்லவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. காலந்தோறும் எம்மை தட்டி எழுப்பி, நல்வாக்கால் எம்மை ஊக்குவிக்கும் இறைவா, எங்கள் உடல், உள்ள, ஆன்ம நோய்களை குணமாக்கி புதுவாழ்வினை எமக்கு அருள வேண்டுமென்றும், உமது கொடையாக நாங்கள் பெற்றுள்ள இந்த ஒப்புரவு காலத்தை நன்றியுடன் பயன்படுத்தி உமக்கேற்ற பிள்ளைகளாக வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. எம்மோடு என்றும் வாழும் வான் படைகளின் ஆண்டவரே இறைவா, எங்களுடைய வாழ்வில் துன்ப துயர வேளைகளில் நீர் உம் மகிமையைக் காண்பிக்கின்றீர், துன்ப துயரங்கள்தான் உமது திருக்கரத்தின் வல்லமையையும், உமது பிரசன்னத்தையும், மாட்சி நிறைந்த உம் மகிமையையும் எமக்குக் காட்டுகிறது என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து, எங்கள் வாழ்வில் வரும் துன்ப துயரங்களை மகிழ்வுடன் ஏற்று வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



## எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை இயற்றிய இரட்சணிய மனோகரம்

**வேத கீதம் விடாமலே**
**ஓதி யோதிஉள் ளன்பினால்**
**பாத பங்கயம் பரவவென்**
**மீதி ரக்கம்வை வேதனே.**



*இறைவா! இயேசுவே! வேதத்தின் பொருளானவரே! வேதத்தையும் வேதம் சார்ந்த பாடல்களையும் நான் மீண்டும் படித்தறியவும், உம்மேல் கொண்ட அன்பினால் உம்மைப் பாடவும், நீவிர்தான் எனக்கு அருள் கண் காட்டியருள வேண்டும். உம் அன்பில் உருகும் மன நிலையை நீவிர்தான் எனக்கு வழங்க வேண்டும்.*



# ஆண்டவருடைய இரவு விருந்து

**14-04-2022**

விப. 12:1-8, 11:14.
1 கொரி. 11:23-26, யோவா. 13:1-15




பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

தீமையின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, நித்தியத்திற்கும் நிலையான வாழ்வைப் பற்றிக்கொள்வதைக் குறிக்கும் பாஸ்கா விழாவில் பங்கெடுக்க வருகை தந்துள்ள அன்பு இறை குலமே, எம்மை நெறிப்படுத்தி வழி நடத்தும் குருகுலமே உங்கள் அனைவரையும் ஆண்டவருடைய இரவு விருந்திற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்று, பழைய ஏற்பாட்டை புதுப்பித்து புனரமைத்து, புதிய ஏற்பாட்டை உருவாக்கு கிறார் இயேசு. அவர் தன்னையே உடைத்து, தனது உடலையும், இரத்தத்தையும் நமக்கு உணவாகவும், பானமாகவும் தருவதன் வழியாக, தன் அன்பின் கொடையாக நற்கருணை என்ற திருவருட்சாதனத்தை ஏற்படுத்துகிறார். அதன் வழியாக அவரைப் போல் அடுத்தவரை அன்பு செய்ய அழைக்கிறார்.

இயேசுவைப் போல், நாமும் அடுத்தவரின் நலனில் அக்கறை கொண்டு, நேசித்து வாழ, நம்மையே உடைத்து பகிர்ந்து கொடுக்க முன்வர வேண்டும் என்று இந்த புனித வியாழன் நம்மை அழைக்கிறது.

தனது மேய்ப்புப் பணியை தொடர்ந்து நிறைவேற்ற, மக்களை பசும்புல் மேய்ச்சலுக்கும், தெளிந்த நீரோடைக்கும் அழைத்துச் செல்ல, அவர்களை மாசற்ற செம்மறிகளாய் மீட்டுருவாக்கம் செய்ய, மீட்புப் பணி தொடர இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தி, குருத்துவத்தில் நம்மைப்போல் சாதாரண மக்களும் பங்கெடுக்க வழி செய்கிறார்.

இயேசுவின் கல்வாரி பாடுகள், நமது வாழ்வுக்கு அடித்தளமாய் அமைய, இன்றைய புனித நிகழ்வுகளில் பங்கெடுத்து நமது வாழ்வை புதுப்பிப்போம். வாழும் நாளில் நாம் நீதியின் வழியில் பயணிக்க, சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் கடைப்பிடித்து பணிவிடை புரிந்து மகிழ, இயேசுவின் அன்புச் சட்டத்தை ஆடையாக அணிந்து வாழ வரம் வேண்டி இன்றைய திருநிகழ்வுகளிலும், திருப்பலியிலும் பக்தியுடன் பங்கெடுப்போம்.

குருத்துவம் ஓர் இறை அழைத்தல், குருத்துவம் இறைவனின் கொடை, குருத்துவம் ஓர் அர்ப்பணம். குருத்துவம் ஓர் ஆன்மீக தியாக வாழ்வு என்பதை உணர்ந்து, நம் திருத்தந்தை ஆயர்கள், நம் பங்குத் தந்தையர் மற்றும் அருட்பணியாளர் அனைவரையும் வாழ்த்தி வணங்குவோம். அவர்களது தியாக வாழ்வை எண்ணி அவர்களைப் போற்றி புகழ்வோம். அவர்களது பணி சிறக்க, நல்ல உடல் நலத்தையும் ஆன்மபலத்தையும் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

இயேசு திவ்ய நற்கருணையை உண்டாக்கிய இந்நன்னாளில் பாஸ்கா திருவிழா பற்றிய முதல் வாசகத்தை திருஅவை நமக்கு வழங்குகிறது. இருளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, விடுதலை வாழ்விற்குள் வீறுநடை போட அடிப்படை காரணமாக இருந்தது இந்த பாஸ்கா திருநிகழ்வு தான். சுதந்திர வாழ்விற்கு எழுச்சி தரும் தென்றலாய் வீசும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம். அது நம் செவியில் நுழைந்து, இதயம் தழுவி, சிந்தையில் நிலைக்கட்டும்.

## இரண்டாம் வாசக முன்னுரை

திருவிருந்தை ஆண்டவர் இயேசு ஏற்படுத்தியது பற்றி, மூன்று நற்செய்தியாளர்கள் மட்டுமன்று, தூய பவுலடியாரும் எடுத்துக்கூறும் கருத்து இன்றைய இரண்டாம் வாசகமாக அருளப்பட்டுள்ளது. வழிபாடுகள் வாழ்வாகும் போதுதான், வாழ்வில் மாற்றம் பிறக்கிறது. அதன் மூலம் வாழ்க்கை அர்த்தமுள்ளதாய் மாறுகிறது. திருவிருந்தில் பங்கு கொள்வது என்பது வெற்றுச் சடங்காக மாறிவிடாமல், நம் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அதற்கான தகுதிகளையும், குணங்களையும் எடுத்துச்சொல்லும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்டு நம்மை நாமே தகுதி உள்ளவர்களாக்குவோம்.

## பாதம் கழுவும் சடங்கு முறை

கருணையும் – கடமையும், பணிவும் – பொறுமையும், எளிமையும் – தாழ்ச்சியும் இருந்தால் தரணியில் தலை சிறந்த தலைவர்களாக உருவாக முடியும் என்பதை இயேசு தனது செயலால் வாழ்ந்து காட்டுகிறார். உயர்ந்தவன் தாழ்ந்தவன், இருப்பவன் இல்லாதவன், படித்தவன் பாமரன் என்ற வேற்றுமைகளைக் களைந்து அனைவரையும் அன்பின் சாயலாக, ஆண்டவரின் வடிவாக ஏற்று வாழ இப்பாதம் கழுவும் திருச்சடங்கு நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

பணிவிடை பெற அல்ல, பணிவிடை புரியவே வந்தேன் என்பதை இயேசு செயலில் காட்டிய அந்த பணிவான நிகழ்வு வெறும் அடையாளச் சடங்கு அல்ல, மாறாக நம் வாழ்வில் தாழ்ச்சியையும், எளிமையையும் போதிக்கும் பாடம் என்பதை மனதில் நிறுத்தி, இத்திருநிகழ்வில் பங்கெடுப்போம்.

## மன்றாட்டுகள்

**உங்கள் பதில்: திவ்ய நற்கருணை நாதரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

1. பணிவிடை பெற அல்ல, பணிவிடை புரியவே வந்தேன் என்று வாழ்ந்துகாட்டிய அன்பு இறைவா, உமது வழியைப் பின்பற்றி, உமது அழைப்பை ஏற்று, பணிவிடை புரிய குருத்துவத்தை தேர்ந்தெடுத்த, எம் திருத்தந்தை, ஆயர்கள் மற்றும் அருட்பணியாளர்கள் அனைவரையும், அவர்களை அருட்பணிக்கு அர்ப்பணித்த அவர்தம் பெற்றோரையும் நிறைவாக ஆசீர்வதியும். உம் வார்த்தையின் வழியே பயணித்து, இறைமக்களை அன்பின் வழியிலும், ஆன்மீக ஒளியிலும் வழி நடத்த அவர்களுக்கு வேண்டிய ஆற்றலையும், ஆன்மபலத்தையும், உள்ள உறுதியையும், நல்ல உடல் நலத்தையும் தந்தருள வேண்டுமென்று நற்கருணை நாதரே உம்மை மன்றாடுகிறோம்.

2. கருணையும் இரக்கமும் நிறைந்த இறைவா, எம்மை வழி நடத்தும் எம் தேசத்தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும். மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதிலும், நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதிலும் முழு கவனம் செலுத்தி கடமையாற்றவும், தாழ்ச்சி, எளிமை, ஒழுக்கம் ஆகிய நற்பண்புகளை கொண்டவர்களாய், லஞ்ச லாவண்யங்களை தவிர்த்து, மக்கட் பணியாற்றவும் அவர்களுக்கு வேண்டிய ஆற்றலையும், பொறுப்புணர்வையும், நல்ல உடல் நலத்தையும் தந்தருள வேண்டுமென்று நற்கருணை நாதரே உம்மை மன்றாடுகிறோம்.

3. தன் அன்பின் கொடையாக, தன்னையே நற்கருணை வடிவில் வழங்கிய இறைவா, பல கோதுமை மணிகள் அப்பமாகி உணவாக வருவது போல, நாங்கள் பலராயினும் ஒரே உடலாய் உமக்குள் வாழ்கிறோம் என்ற உயர்ந்த எண்ணத்தோடு, நாங்கள் அனைவரும் ஒரு குலம், ஓரினம் என்ற சிந்தனையுடன் வாழ, அருள் தர வேண்டுமென்று நற்கருணை நாதரே உம்மை மன்றாடுகிறோம்.

4. பழைய ஏற்பாட்டை புதுப்பித்து புனரமைத்து, புதிய ஏற்பாட்டை எமக்காக உருவாக்கிய இறைவா, கணவன், மனைவி, பிள்ளைகள் என்ற குடும்ப உறவில் அப்பழுக்கற்ற அன்பை வெளிப்படுத்தவும், அதன் நீட்சியாக அயலாரோடு அன்பைப் பகிர்ந்து, அனுசரித்து வாழ்ந்து, எங்கள் சமுதாயக் கடமைகளை சிறப்புற ஆற்றி, நீர் வகுத்த மீட்பின் பாதையில் உம்மோடு சேர்ந்து பயணிக்க அருள் தர வேண்டுமென்று நற்கருணை நாதரே உம்மை மன்றாடுகிறோம்.

## நற்கருணை பவனி முன்னுரை



இயேசு தான் சென்றவிடமெல்லாம் அன்பை விதைத்துக்கொண்டே சென்றார். எண்ணற்ற பல புதுமைகளை புரிந்துகொண்டே சென்றார். மக்களுக்கு பல நன்மைகளை செய்து கொண்டே சென்றார்.

அவர் என்னை தொட மாட்டாரா? அவரது கடைக்கண் பார்வை என் மேல் விழாதா? அவரது ஆடையின் விளிம்பையேனும் தொட மாட்டோமா? என்று அன்று பலர் ஏங்கினர். இன்று இப்போது அதே இயேசு, விண்ணகம் நோக்கிய பயணத்தில், வழிப் பயணக் கொடையான, ஆரோக்கியத்தையும், ஆற்றலையும் வழங்கவல்ல ஆன்ம உணவான அப்ப வடிவில் நம்மைத் தேடி, நம் மத்தியில் பவனியாக வருகிறார்.

வாருங்கள் இறை மக்களே, தன் அன்பின் கொடையாக தன்னையே நற்கருணை வடிவில் வழங்கிய இறைவனை வரவேற்க தயாராவோம். நம்மை நோக்கி வருகின்ற அவரை, அனைவரும் முழந்தாள் பணிந்து, வணங்கி வரவேற்போம். கெத்ஸ்மனி தோட்டத்தில் தனிமையில் தனது துன்ப நிலையை எண்ணி துயரப்படும் நம் இயேசுவோடு நாமும் விழித்திருந்து செபிப்போம்.

## நன்றி மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா, உம் திருமகனின் இறுதி இராவுணவை நினைவு கூர்ந்து கொண்டாடி மகிழ புனித வியாழன் என்ற மாபெரும் நாளை எமக்குத் தந்து, எம்மில் மனமாற்றம் நிகழ அருள் தந்தமைக்காய் இறைவா உம்மை நன்றி கூறுகிறோம்.

பணியை ஏற்பதற்கல்ல, பணிவிடை புரியவே வந்தேன் என்று கூறியதோடல்லாமல் பணிவு, எளிமை, தாழ்ச்சி, பொறுமை, அன்பு, கருணை ஆகிய நற்பண்புகளை வாழ்வாக்கி வாழ்ந்து காட்டிய இறைவா, அந்த நற்பண்புகளை இன்றைய புனித நிகழ்வுகள் வழியாக நாங்களும் பெற்று மகிழ அருள் தந்தமைக்காய் இறைவா உமக்கு நன்றி கூறுகிறோம்.

குருத்துவம் என்ற அரிய அருட் சாதனைத்தை இன்றைய நாளில் உருவாக்கி, உலக மாந்தரின் வாழ்க்கையை நெறிப்படுத்தி, நேரிய வழியில் வழி நடத்தும் நல்ல மேய்ப்பர்களை தந்த உம் கருணைக்காய் இறைவா உமக்கு நன்றி கூறுகிறோம். உம் திருஉடலை உணவாகவும், உம் திரு இரத்தத்தை பானமாகவும் ஈந்து, என் ஆன்ம பசி போக்கிய ஈடு இணையில்லா உம் தியாகத்தை எண்ணி இறைவா உமக்கு நன்றி கூறுகிறோம்.

உம் திருஉடல் திருஇரத்தத்திலான புதிய உடன்படிக்கையின் மாண்பினையும் பிறர் அன்பு அட்டளையின் முக்கியத்துவத்தையும் ஆழ்ந்து உணர்ந்தவர்களாய் எம் வாழ்வை தொடர அருள் தர வேண்டுமாய் நன்றியோடு இறைவா உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.





# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

**15-04-2022**

எசா. 52:13 - 53:12,
எபி. 4:14-16, 5:7-9,
யோவா. 18:1 - 19 : 42



**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

இருள் மண்டிக் கிடந்த இந்த உலகிற்கு இயேசு தன்னையே மெழுகாய் உருக்கி, ஒளி தந்த தியாகத் திருநாளாகிய புனித வெள்ளி வழிபாட்டிற்கு வருகை தந்துள்ள அன்பு இறைமக்களாகிய உங்கள் அனைவரையும் வரவேற்று மகிழ்கிறேன்.

இயேசுவின் துயர் மிகுந்த பாடுகளின் நினைவுகளில் மூழ்கி இருக்கும் நாம், இன்று அவரது அழகான ஆளுமையை தியானித்து, நேசித்து? அவரது அன்பை சுவைத்து நமதாக்கிக் கொள்ள இங்கே கூடி யுள்ளோம். விண்ணிற்கும், மண்ணிற்கும் இடையில் சிலுவையில் பலியான செம்மறி யாக உயர்த்தப்பட்டிருக்கிற இயேசுவைப் பார்த்து மீட்புப் பெற நாம் அனைவரும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

நம் ஆண்டவர் இயேசுவின் மரணத்தால், தாய் திருச்சபை துக்கத்தில் மூழ்கி இருப்பதை வெறுமையான பீடமும், எரியாத மெழுகுவர்த்திகளும் ஒலிக்காத மணிகளும் நமக்கு நினைவூட்டுகின்றன.

இன்றைய திருவழிபாட்டிற்கு திருச்சிலுவை நம்மை வரவேற்கிறது. அது "சிலுவையின்றி வெற்றி இல்லை" என்ற விதியை விளக்குகிறது. "உலகத்தின் இரட்சண்யம் இதிலேதான் தொங்கியது" என்பதை பறை சாற்றுகிறது.

இயேசுவின் பிறப்பு ஒரு தரித்திர நிலையில் அமைந்தாலும், அவரின் இறப்பு புதியதொரு சரித்திரத்தை படைக்கிறது. அவரது மரணம் நமக்குள் ஒரு மறுமலர்ச்சியை மலரச் செய்கிறது என்ற நம்பிக்கையோடு இயேசுவின் திருப்பாடுகள் குறித்த தியானத்தில் பக்தியுடன் பங்கெடுப் போம். இயேசுவின் மரணத்தால் நாம் உண்மையை, உரிமையை பெற்று விட்டோம் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன் இறந்த இயேசுவுக்கு அஞ்சலி செலுத்துவோம்.

இறைவனின் வார்த்தையைக் கேட்டு இயேசுவின் பாடுகள், மரணம் இவற்றில் நாம் மனம் பதித்து மனமாற்றம் அடைவோம். அதன் மூலம் நம் வாழ்வில் புனிதம் பெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

ஆண்டவரின் ஊழியர் பற்றிய இறுதிக் கவிதை இன்றைய வாசகமாக அமைகிறது. எசாயா இறைவாக்கினர் இயேசுவை துன்புறும் ஊழியராக, நமது துயரம் சுமக்கும் சுமைதாங்கியாக சித்தரித்து இயேசுவின் பாடுகளை முன்னறிவிக்கிறார். துன்பங்களைத் தாங்கிக்கொள்வதும், ஏற்றுக்கொள்வதும்தான் பணி வாழ்வின் உச்சம் என்பதை உணர்த்தும் இவ்வாசகத் தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இயேசுவை நித்திய தலைமை குருவாக படம்பிடித்துக் காட்டி, அவர் எவ்வாறு பழைய ஏற்பாட்டின் குருக்களில் இருந்து மாறுபட்டவராக இருக்கின்றார் என்பதையும், பழைய ஏற்பாட்டின் பலிப்பொருட்கள் குறையுடையதாய் இருக்கும்போது, புதிய பலிப்பொருளாகிய இயேசு எப்படி குறைவில்லாத செம்மறியாக இருக்கிறார் என்பதையும் விளக்கும் இந்த இரண்டாம் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

# திருச்சிலுவை ஆராதனை – முன்னுரை




இயேசுக் கிறிஸ்துவின் தியாகப் பலியால் வெற்றியின் சின்னமாக, தியாகத்தின் சின்னமாக உயர்த்தப்பட்ட திருச்சிலுவையின் ஆராதனை இப்போது தொடங்குகிறது. இயேசுவுக்கு மூன்று முத்தங்கள் கிடைத்தன.




மரிய மகதலேனாள் தன் பாவத்திற்காக கண்ணீர்விட்டு அழுது, இயேசுவின் பாதத்தை நனைத்துக் கொடுத்த முத்தம் – அது பாவ மன்னிப்பின் முத்தம். இந்த முத்தம் தான் இன்று நாம் இயேசுவுக்குக் கொடுக்கக்கூடியது. அந்த முத்தத்தை இப்போது அவரை தாங்கிய சிலுவைக்கு கொடுக்கப்போகிறோம்.



அருள் நிறைந்த அன்னை மரியாள் கொடுத்த முத்தம் – அது புனித முத்தம். அது நம்மால் கொடுக்க முடியாது.





யூதாசு பணத்துக்காக கொடுத்த முத்தம் – அது துரோக முத்தம். அதை நாம் கொடுக்கக் கூடாது.

குருவானவர் திருச்சிலுவை மரமிதோ என்ற வரிகளைப் பாட நாம் அனைவரும் வருவீர் ஆராதிப்போம் எனப் பாடுவோம். திருச்சிலுவைக்கு முதலில் குருவானவர் முத்தி செய்வார். அதன் பிறகு அனைவரும் வரிசையாக வந்து இயேசுவின் திருப்பாதங்களை பக்தியுடன் முத்தி செய்வோம்.

# வத்திக்கான் செய்திகள்



## குடும்பங்கள் தயாரிக்கும் புனித வெள்ளி சிலுவைப் பாதை சிந்தனைகள்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இம்மாதம் 15ம் தேதி புனித வெள்ளியன்று, உரோம் நேரம் இரவு 9.15 மணிக்கு, கொலோசேயத்தில் சிலுவைப் பாதை பக்தி முயற்சியை தலைமையேற்று நடத்துவார்

இவ்வாண்டு உரோம் நகரின் கொலோசேயத்தில் நடைபெறும் புனித வெள்ளி சிலுவைப் பாதை தியானச் சிந்தனைகள், மற்றும், செபங்களைத் தயாரிக்கும் பொறுப்பை, கத்தோலிக்க குழுமங்கள் மற்றும், கழகங்களோடு தொடர்புடைய பல குடும்பங்களிடம் ஒப்படைத்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

ஏப்ரல் 07, இவ்வியாழனன்று இத்தகவலை வெளியிட்ட திருப்பீட செய்தித் தொடர்பகத்தின் இயக்குநர் மத்தேயோ புரூனி அவர்கள், புதுலிஷெஷ்வி யிழிளமிஷ்மிஷ்ழி அதாவது அன்பின் மகிழ்வு திருத்தூது அறிவுரை மடல் வெளியிடப்பட்டதன் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டி, திருஅவையில் குடும்ப ஆண்டு சிறப்பிக்கப்படும்வேளை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித வெள்ளி சிலுவைப் பாதை தியானச் சிந்தனைகளைத் தயாரிக்கும் பொறுப்பை குடும்பங்களிடம் ஒப்படைத்துள்ளார் என்று கூறினார்.

இச்சிந்தனைகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள தலைப்புக்களின்படி, சில குடும்பங்கள், சிலுவைப் பாதை நிலைகளுக்கு இடையே சிலுவையை ஏந்திச் செல்லும் என்றும் புரூனி அவர்கள் தெரிவித்தார்.

### கொலோசேயத்தில் மீண்டும் புனித வெள்ளி சிலுவைப் பாதை

இம்மாதம் 15ம் தேதி புனித வெள்ளிக்கிழமை மாலையில், வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவிலில், ஆண்டவரின் திருப்பாடுகள் திருவழிபாட்டை நிறைவேற்றியபின்னர், அன்று உரோம் நேரம் இரவு 9.15 மணிக்கு, கொலோசேயத்தில் சிலுவைப் பாதை பக்திமுயற்சியை தலைமையேற்று நடத்துவார், திருத்தந்தை பிரான்சிஸ்

கோவிட்-19 பெருந்தொற்று கட்டுப்பாட்டு விதிமுறைகளால் கடந்த இரண்டுகளாக, புனித வெள்ளி சிலுவைப் பாதை பக்திமுயற்சி, வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் நடைபெற்றது.

### Amoris Laetitia குடும்ப ஆண்டு

2014, மற்றும், 2015ம் ஆண்டுகளில் வத்திக்கானில் நடைபெற்ற குடும்பம் பற்றிய, உலக ஆயர்கள் மாமன்றங்களின் தீர்மானங்களின் அடிப்படையில், குடும்பங்களுக்கு மேய்ப்புப்பணி ஆற்றவேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2016ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் தேதி Amoris laetitia என்ற அன்பின் மகிழ்வு திருத்தூது அறிவுரை மடலை வெளியிட்டார்.

குடும்பத்தில், அன்பின் அழகு மற்றும், மகிழ்வு ஆகியவை பற்றிய Amoris laetitia திருத்தூது அறிவுரை மடல் வெளியிடப்பட்டதன் ஐந்தாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும்வண்ணம், திருஅவையில் 2021ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் தேதி, Amoris Laetitia குடும்ப ஆண்டு அறிவிக்கப்பட்டது. இந்த குடும்ப ஆண்டு, 2022ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் தேதி நிறைவடையும். வருகிற ஜூன் மாதம் 22ம் தேதி 26ம் தேதி வரை, உரோம் நகரில் சிறப்பிக்கப்படும் பத்தாவது உலக குடும்பங்கள் மாநாட்டின் இறுதியில், திருத்தந்தை இக்குடும்ப ஆண்டை நிறைவுசெய்து வைப்பார்.

# இந்த வார விவிலிய வாசகங்கள்



## ஆண்டவரின் பாடுகளின் குருத்து ஞாயிறு

**10.04.2022 – ஞாயிற்றுக்கிழமை**
குருத்தோலைப் பவனி நற்செய்தி வாசகம் : லூக் 19: 28–40
முதல் வாசகம் : எசாயா 50: 4–7
இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 2: 6–11
நற்செய்தி : லூக்கா 22:14 – 23:56

**11.04.2022 – திங்கட்கிழமை**
முதல் வாசகம் : எசாயா 42: 1–7
நற்செய்தி : யோவான் 12: 1–11

**12.04.2022 – செவ்வாய்க்கிழமை**
முதல் வாசகம் : எசாயா 49: 1–6
நற்செய்தி : யோவான் 13: 21–33, 36–38

**13.04.2022 – புதன்கிழமை**
முதல் வாசகம் : எசாயா 50:4–9
நற்செய்தி : மத்தேயு 26: 14–25


**14.04.2022 – வியாழக்கிழமை**
முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 12: 1–8, 11–14
நற்செய்தி : யோவான் 13: 1–15

**15.04.2022 – வெள்ளிக்கிழமை**
முதல் வாசகம் : எசாயா 52:13 – 53:12
இரண்டாம் வாசகம் : எபிரேயர் 4:14–16; 5:7–9
நற்செய்தி : யோவான் 18:1 – 19:42

**16.04.2022 – சனிக்கிழமை**
முதல் வாசகம் : தொடக்க நூல் 1:1–2:2
இரண்டாம் வாசகம் : தொடக்க நூல் 22:1–18
மூன்றாம் வாசகம் : யாத் 14:15–15:1
நான்காம் வாசகம் : எசாயா 54:5–14
ஐந்தாம் வாசகம் : எசாயா 55:1–11
ஆறாம் வாசகம் : பாரூ 3:9–15, 32–38, 4:1–4
ஏழாம் வாசகம் : எசேக் 36:16–28
நற்செய்தி : உரோமையர் 6:3–13

**Blessed is the King who comes in the Name of The Lord**

- Luke 19:38 -






# திருவிவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட

## தித்திக்கும் திருக்குறள்

**ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்.**

| |
|---|
| அதிகாரம் 13 |
| அடக்கமுடைமை |
| குறள் - 128 |

**பொருள் :**தீய சொல்லால் தீமைதான் விளையும்: அது மற்ற நலன்களை எல்லாம் அழித்துவிடும்.

‘இயேசுவை உங்களுக்கு நான் காட்டிக் கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்?‘ என்று கேட்டான். அவர்களும் முப்பது வெள்ளிக் காசுகளை எண்ணி அவனுக்குக் கொடுத்தார்கள்.

மத்தேயு நற்செய்தி 26:15

சீடர்கள் என்றாலே குருவுக்கு பெருமை சேர்ப்பவர்கள். தம் குருவுக்கு உண்மையாக இருப்பவர்கள்; கடவுளைப்பற்றி சாட்சியம் கொடுப்பவர்கள். ஆனால் இங்கு 12 சீடர்களில் ஒருவரான யூதாஸ் இஸ்காரியோத்துவினுடைய தீச்சொல் ஒரே ஒரு தீச் சொல்லால் அவனுடைய வாழ்நாளின் நலன்கள் எல்லாம் அழிந்து போனது. அவன் தலைமை குருவிடம் வந்து இயேசுவை உங்களுக்கு நான் காட்டிக் கொடுத்தால் என்ன தருவீர்கள் என்று கேட்டான். அவ்வளவுதான் வேறு எதுவும் கேட்கவில்லை ஆனால் அந்த வார்த்தை எவ்வளவு பெரிய தீய விளைவுகளை விளைவிக்கும் என்பதை அவனே அறிய வில்லை என்பதுதான் உண்மை

இயேசுவோடு நடந்த போதும், இயேசுவோடு இருக்கும் பொழுதும் எவ்வளவு மகிழ்வாக இருந்திருப்பான்? இயேசுவின் எத்தனை எத்தனை வார்த்தைகள் அவனை தேற்றி இருக்கும்? அதிலும் சீடர்களில் அவன்தான் பணம் வசூலித்தவன். cashier. எவ்வளவு உயர்வான பதவி?.. அவ்வப்போது பணத்தை எடுத்துக் கொள்வான் என்பதையும் நமக்கு விவிலியம் தெரிவிக்கிறது. அப்படி என்றால் அவன் அப்போதே திருடனாகவும் இருந்திருக்கிறான்.

பாஸ்கா விழாவுக்கு ஆறு நாளுக்கு முன்பு இயேசு பெத்தானியாவுக்குச் சென்றார். அங்குதான் இயேசு இலாசரை உயிர்த்தெழச் செய்தார்.

அங்கு அவருக்கு விருந்து அளிக்கப்பட்டது. மார்த்தா உணவு பரிமாறினார். இயேசுவோடு பந்தியில் அமர்ந்திருந்தவர்களுடன் இலாசரும் இருந்தார்.மரியா இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத்தைலம் ஏறக்குறைய முந்நூற்று இருபது கிராம் கொண்டுவந்து இயேசுவின் காலடிகளில் ப+சி, அதனைத் தமது கூந்தலால் துடைத்தார். தைலத்தின் நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது.

இயேசுவின் சீடருள் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்க இருந்தவனுமான யூதாசு இஸ்காரியோத்து,

‘இந்தத் தைலத்தை முந்நூறு தெனாரியத்துக்கு விற்று, அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா?‘ என்று கேட்டான்.

ஏழைகள்பால் கொண்டிருந்த அக்கறையினால் அல்ல மாறாக அவன் ஒரு திருடனாய் இருந்ததால்தான் இப்படிக் கேட்டான். பணப்பை அவனிடம் இருந்தது. அதில் போடப்பட்ட பணத்திலிருந்து அவன் எடுத்துக் கொள்வதுண்டு.

(யோவான் நற்செய்தி 12:1-6)

தீய வார்த்தைகள் தீய நடத்தைகள் பணத்தில், பண ஆசையிலிருந்தே தொடங்குகின்றன. ’ ஆசையே

துன்பத்திற்கு காரணம்' என்கிறார் புத்தர். நாம் கடவுளோடு இருந்தாலும், அவரையே எண்ணிக்கொண்டு நடந்தாலும், நம் எண்ணங்கள் ஆண்டவரோடு ஒன்றித்திருக்கிறதா? என்று நம்மை நாமே ஆன்ம பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இல்லை என்றால் எவனை விழுங்கலாம் என்று கர்ஜிக்கும் சிங்கம் போல இருக்கும் தீயவன் நம்மையே பற்றிக் கொள்வான்; அதனால் தீமையே வந்து சேரும்.

அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள். உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம்போலத் தேடித் திரிகிறது.

(1பேதுரு 5:8)

ஏனென்றால் நம்மை விழத்தாட்டுகிற ஏராளமான காரியங்கள் இவ்வுலகில் உண்டு. அது வாழுமிடமாகட்டும்; உடன்பிறந்தார் ஆகட்டும்; நம்மை பழிச்சொல்லுக்கு ஆளாக்குவார்கள். நாம் தாம் அறிவு தெளிவோடு ஆண்டவரை எப்பொழுதும் பற்றி இருக்கிற பிள்ளைகளாக இருக்க வேண்டும். இதில் ஜாக்கிரதை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

என் எதிரிகள் என்னைப்பற்றித் தீயது பேசி, 'அவன் எப்போது சாவான்? அவன் பெயர் எப்போது ஒழியும்' என்கின்றனர்.

ஒருவன் என்னைப் பார்க்கவந்தால், நயவஞ்சகமாகப் பேசுகின்றான்; என்னைப்பற்றிய தவறான செய்திகளை சேகரித்துக்கொண்டு, வெளியே போய் அவற்றைப் பரப்புகின்றான்.

என்னை வெறுப்போர் அனைவரும் ஒன்றுகூடி எனக்கு எதிராய்க் காதோடு காதாய்ப் பேசுகின்றனர். எனக்குத் தீங்கிழைக்கத் திட்;டமிடுகின்றனர்.

'தீயது ஒன்று அவனை உறுதியாய்ப் பற்றிக்கொண்டது; படுக்கையில் கிடக்கின்ற அவன் இனி எழவே மாட்டான்' என்று சொல்கின்றனர்.

என் உற்ற நணபன்;, நான் பெரிதும் நம்பினவன், என் உணவை உண்டவன், எனக்கு இரண்டகமாகத் தம் குதிகாலைத் தூக்குகின்றான்.

ஆண்டவரே! என் மீது இரங்கி, நான் அவர்களுக்குப் பதிலடி கொடுக்கும்படி தூக்கிவிடும்.

என் எதிரி என்னை வென்று ஆர்ப்பரிக்கப் போவதில்லை; இதனால், நீர் என்னில் மகிழ்வுறுகின்றீர் என்பதை அறிந்து கொள்கின்றேன்.

நானோ நேர்மையில் உறுதியாய் இருக்கின்றேன்; நீர் எனக்கு ஆதரவளிக்கின்றீர்; உமது முன்னிலையில் என்னை என்றும் நிலைநிற்கச் செய்கின்றீர். இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் புகழப் பெறுவராக! ஊழி ஊழியாய்ப் புகழப் பெறுவராக! ஆமென்! ஆமென்!

(திருப்பாடல் 41:5-13)

*இயேசுவுக்கே புகழ்*

**–லீமா விக்டோரியா**



# திருவிவிலியத்தோடு திருக்குறளும் பழப்போம்...